**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 498** **நாள்: 21.09.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் 1 முதல் 15 வரையிலான அனைத்து மண்டலங்களில் உள்ள பகுதிகளில் கொசு ஒழிப்பு உள்ளிட்ட டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

**இப்பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி வட்டார துணை ஆணையாளர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் அலுவலர்கள் மற்றும் களப் பணியாளர்களால் வீடுவீடாகச் சென்று டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, இன்று (21.09.2026) வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-36க்குட்பட்ட சுந்தரராஜன் தெருவில் மாநகராட்சிப் பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் கொசு ஒழிப்பு உள்ளிட்ட டெங்கு தடுப்பு நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு- 111க்குட்பட்ட கோபாலபுரம் 6ஆவது தெரு, வார்டு-123க்குட்பட்ட மயிலாப்பூர், கற்பகாம்பாள் நகர் பகுதியில் மேற்கொள்ளப்படும் காய்ச்சல் பாதிப்பு கண்டறியும் நடவடிக்கைகள், மற்றும் இராணி மேரிக் கல்லூரியில் மாநகராட்சிப் பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் கொசு உற்பத்தியைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, அலுவலர்களுக்கு அறிவுறுரைகளை வழங்கினார்.

தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், ஆலந்தூர் மண்டலம், வார்டு-158க்குட்பட்ட குத்தாளம்மன் கோவில் தெரு, துளசிங்கபுரம் 1ஆவது மற்றும் 2ஆவது தெருவில் உள்ள வீடுகளில் மாநகராட்சிப் பணியாளர்கள் கொசு உற்பத்தியைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது, மாநகராட்சி அலுவலர்கள், களப் பணியாளர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**